## கழகத் தலைவரின் 'தி இந்து' கட்டுரை

# 'நீட்' தேர்வில் மட்டுமல்ல; 'நீட்' தேர்வே மோசடிதான் என படம் பிடித்துள்ளது!

## எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கருத்து!

சென்னை, ஜூலை, 24-

"கழகத் தலைவரின் 'தி இந்து' ஆங்கில நாளிதழின் கட்டுரை 'நீட்' தேர்வில் மட்டுமல்ல; 'நீட்' தேர்வே மோசடிதான் என்பதை படம் பிடித்துக் காட்டியுள்ளது" என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கூறியுள்ளார்.

இதுகுறித்து அவர் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-

NEET தேர்வில் மட்டுமல்ல, NEET தேர்வே மோசடிதான் என்பதை படம்பிடித்துக் காட்டுகிறது கழகத்தலைவர் @mkstalin அவர்களின் இன்றைய the_hindu OpEd கட்டுரை!

ஏழை எளிய, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட, கிராமப்புற, அரசுப்பள்ளி மாணவர்களின் மருத்துவம் உள்ளிட்ட உயர்கல்விக் கனவைச் சிதைப்பதே NEET போன்ற நுழைவுத் தேர்வுகளின் உண்மையான நோக்கம்!

அந்தத் தடையை உடைப்பதற்கான படையாக DMK என்றைக்கும் முன் வரிசையில் வாள் தூக்கி நிற்கும்.

BanNEET AbolishNEET

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.



NEET's promise has failed; it's time to trust States

M.K. Stalin

Former Chief Minister of Tamil Nadu and President, Dravida Munnetra Kazhagam (DMK)

The unprecedented protests by students across the country following the NEET question paper leak are not merely about one compromised examination. They reflect a deeper crisis of confidence in a system that was projected as the ultimate guardian of merit. When lakhs of students lose faith in the fairness of the process that determines their future, the nation's conscience is shaken.

Tamil Nadu was the first State to raise the red flag against NEET – not because of irregularities in its conduct, but because of the very philosophy behind a single, high-stakes national examination deciding the future of every aspiring medical student. The problem was structural, not procedural. Recent events have vindicated that concern.

The Union Government introduced NEET with three principal promises. First, that it would reduce the burden of multiple entrance examinations. Second, that it would eliminate the scourge of capitation fees and commercialisation of medical admissions. Third, that it would improve standards by ensuring only the most meritorious students entered medical colleges, thereby producing better doctors.

On every one of these counts, NEET has failed.

Instead of reducing inequality, it has merely shifted the centre of learning from schools to coaching centres. Merit is no longer measured through sustained academic performance but by the ability to master coaching-centric test-taking techniques. This has disproportionately benefited those who can afford expensive coaching while disadvantaging rural students, government school students, first-generation learners, and those studying in State Boards and regional languages.

Countries such as the U.S., Canada, Australia and Germany admit students through school performance, standardisation methods, and holistic evaluation – not through a single nationwide entrance examination. Where entrance tests are used, they are generally one component among several, not the sole determinant.

NEET's own experience further exposes the myth of merit. The qualifying threshold for undergraduate admissions remains remarkably low. For postgraduate and super speciality admissions, qualifying percentiles have repeatedly been reduced to zero percentile and, in some cases, even negative marks, simply to fill expensive private college seats. If merit truly governed the system, such extraordinary relaxations would never become necessary. Instead, the reality is stark: poor students must compete at the highest level for limited government seats, while those with financial means can access private medical education with far lower benchmarks. That is not meritocracy; it is privilege institutionalised.

Equally misplaced is the belief that NEET has curbed commercialisation. The coaching industry has flourished into a multi-thousand crore enterprise, with families spending enormous sums over several years to prepare their children. The burden that NEET promised to eliminate has merely changed form – from capitation fees to coaching fees. Simultaneously, deemed universities and private self-financing medical colleges have found new ways to commercialise medical education. Instead of demanding donations upfront, many have increased tuition fees and other charges, making medical education increasingly unaffordable.

**Tamil Nadu's outlook**

Tamil Nadu recognised these concerns early. We constituted the Justice A.K. Rajan Committee, which concluded that NEET neither improved medical education nor ensured social justice. Acting on its findings, the Tamil Nadu Legislative Assembly unanimously passed legislation seeking exemption from NEET. The Governor withheld assent. The Union Government declined to engage meaningfully with the substance of the State's concerns.

If States are trusted to establish institutions, recruit faculty, maintain standards, and fund medical education, they must also be trusted to determine admissions consistent with their own educational systems and social justice policies.

The solution lies in strengthening school education, restoring confidence in School Board assessments and allowing States to formulate admission policies suited to their constitutional responsibilities and local realities. Statistical harmonisation can fairly compare marks awarded by different Boards. States that seek exemption from NEET should be allowed to do so. Diversity in admissions need not compromise standards; it can strengthen both equity and excellence.

Another aspect requiring urgent reconsideration is the All India Quota (AIQ). This judicially created system diverts State-funded medical seats to a central pool, weakening federalism, and social justice. It disproportionately burdens women as they are unlikely to relocate to another State for postgraduation, fails to address regional disparities effectively, and deprives States of the benefits of their investments.

The recent student protests must serve as a wake-up call – not merely to improve examination security but to fundamentally rethink the entire framework of high-stakes national entrance examinations. The Union Government must hold consultations with an open mind rather than treating uniformity as an end in itself. India does not need greater centralisation. It needs greater trust in its States, its schools and its students.

The future of medical education deserves a fairer and more federal approach.

The student protests must serve as a wake-up call – not merely to improve exam security but to fundamentally rethink the entire framework of high-stakes national entrance exams

## இரண்டில் ஒன்று நாடு எதிர்பார்க்கிறது!

சிறுதுளிகள்
சேர்ந்துவிட்டன தில்லியிலே

சிறுதுளியின் அடுத்த நிலை
என்ன என்பதைப்
பழமொழி அறிந்தவர்கள்
அறிவார்கள்

மழை வெள்ளத்திலும் வலியது
மனித வெள்ளம்

வங்கதேசமும் நேபாளமும்
இலங்கையும் அந்த வெள்ளத்தில்
மூழ்கிய கதை
மூத்தவர்கள் அறியாததில்லை

ஆர்ப்பாட்டம் அடங்கவும்
அமைச்சர் பதவி நிலைக்கவும்
ஒரே தீர்வு
நீட் தேர்வின் நிரந்தர நீக்கம்தான்

அரசுக்கு
அது பின்னடைவாகிவிடும்
என்று பேசப்பட்டால்
சமரசத் தீர்வு ஒன்றும் இருக்கிறது

அதுதான்
நீட் தேர்வை
மாநிலப் பட்டியலுக்கு மாற்றுவது

இரண்டில் ஒன்று
நாடு எதிர்பார்க்கிறது



கவிப்பேரரசு
**வைரமுத்து**



நெல்லை பாளை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனை கழக முதன்மை செயலாளர் முன்னாள் அமைச்சர் கே. என்.நேரு நேரில் சந்தித்து பேசி உடல் நலம் குறித்து விசாரித்தார்.உடன் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன், மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ., தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ.உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

## நெல்லை - பாளை மத்திய சிறையில்

# மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ.வை - முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு சந்தித்தார்!

### இரா.ஆவுடையப்பன் - மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. - ஈ.ராஜா எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நெல்லை.ஜூலை.24-

தமிழக முதல்வரை அவதூறாக பேசிய வழக்கில் கைது செய்யப்பட்டு பாளை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயனை கழக முதன்மை செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என். நேரு சந்தித்து பேசி உடல் நலம் குறித்து விசாரித்தார்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டியில் நடந்த தி.மு.க.தேர்தல் நன்றி அறிவிப்பு பொதுக்கூட்டத்தில்,தமிழ்நாடு முதல்வரை அவதூறாக பேசியதாக விளாத்திகுளம் கழக சட்டமன்ற உறுப்பினர் மார்க்கண்டேயன் கடந்த 20 ம் தேதி காலை விளாத்தி குளத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கைது செய்யப்பட்டார். பின்னர் தூத்துக்குடி எஸ்பி அலுவலகத்தில் வைத்து அவரிடம் 11 மணி நேரம் விசாரணை நடத்திய போலீசார், பின்னர் அங்குள்ள ஜே.எம். கோர்ட் 1 ல் ஆஜர்படுத்தி, மாஜிஸ்திரேட் சுமதி உத்தரவின் பேரில் அன்று நள்ளிரவு பாளை மத்திய சிறையில் அடைத்தனர்.

இந்நிலையில் கழக முதன்மை செயலாளரும், முன்னாள் அமைச்சருமான கே.என்.நேரு எம்.எல்.ஏ. பாளையங்கோட்டை மத்திய சிறையில் நேற்று முன்தினம் (22 ம் தேதி) மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ.வை சந்தித்துப் பேசினார். அப்போது அவரது உடல்நலம் குறித்தும் விசாரித்தார்.

இந்நிகழ்வில் நெல்லை மேற்கு மாவட்ட பொறுப்பாளர் இரா.ஆவுடையப்பன்,மத்திய மாவட்ட பொறுப்பாளர் மு.அப்துல் வஹாப் எம்.எல்.ஏ. தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ, முன்னாள் எம்பி சா.ஞானதிரவியம்,திருச்சி மேயர் அன்பழகன்,மாநில வர்த்தக அணி இணை செயலாளர் மாலை ராஜா, மாநில மகளிர் தொண்டரணி துணைச் செயலாளர். விஜிலா சத்யானந்த்,மாநில விவசாய தொழிலாளரணி துணை செயலாளர் கணேஷ் குமார் ஆதித்தன், நெல்லை மத்திய மாவட்ட துணை செயலாளர் எஸ். வி.சுரேஷ்,நெல்லை துணை மேயர் கே.ஆர் ராஜூ, நெல்லை கிழக்கு மாநகர பொறுப்பாளர் தினேஷ், மேலப்பாளையம் பகுதி செயலாளர் துபை சாகுல், ஒன்றிய செயலாளர்கள் மானூர் அருள்மணி, எரிக் ஜூடு,மாமன்ற உறுப்பினர் டாக்டர் சங்கர், தலைமை பேச்சாளர் நெல்லை முத்தையா, கிழக்கு மாவட்ட சுற்றுச் சூழல் அணி அமைப்பாளர் முருகன்,மகளிர் தொண்டரணி அமைப்பாளர் அனித்தா, முத்து உள்பட கழகத்தினர் பலர் உடனிருந்தனர்.

மேலும் பாளை மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ள மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ.வை டெல்லி சட்டக் கல்லூரியில் படித்து வரும் அவரது மகன் அக்‌ஷய் முறைப்படி அனுமதி பெற்று தந்தை மார்க்கண்டேயன் எம்.எல்.ஏ.வை சந்தித்து பேசினார்.

## 'ஜனநாயகன்' பேனருக்காக

# காமராஜரின் பேனர் தூக்கி எறியப்பட்ட கொடூரம்!

### காலை உணவுத் திட்டம் பெயரை மாற்றிய மறுநாளே த.வெ.க. முகத்திரை அம்பலம்!

கோவை, ஜூலை. 24-

**கோவை மாவட்டம் பொள்ளாச்சி அருகே ஜனநாயகன் கட் அவுட் வைப்பதற்காக அங்கிருந்த காமராஜர் பிறந்தநாள் விழா கட் அவுட்டை த.வெ.க.வினர் தூக்கி எறிந்துள்ளனர்.**

'ஜனநாயகன்' திரைப்படம் கடந்த ஜனவரி மாதம் வெளியாகவிருந்த நிலையில் சென்சார் சான்றிதழ் வாங்காததால் திட்டமிட்டபடி ரிலீஸ் ஆகவில்லை. இதையடுத்து சென்சாருக்காக கோர்ட், கேஸ் என அலைந்த நிலையில் தற்போது அப்படம் வெளியாகியுள்ளது.

இந்த நிலையில் படம் ரிலீஸ் தேதி சொன்னதுமே விஜய் ரசிகர்கள் உற்சாகமடைந்தனர். மேலும் ஆங்காங்கே பேனர் வைக்கும் பணிகளில் ஈடுபட்டனர். அந்த வகையில் பொள்ளாச்சியில் அமைச்சர் விக்னேஷின் ஆதரவாளர்கள் 'ஜனநாயகன்' பேனர் வைக்க தயார் செய்தனர்.

அப்போது ஏற்கெனவே அங்கிருந்த காமராஜர் பிறந்தநாள் விழா பேனரை எடுத்து தூக்கி எறிந்துவிட்டு ஜனநாயகன் பேனர் வைத்த கொடூர சம்பவம் நிகழ்ந்துள்ளது.

முதல்வரின் காலை உணவுத் திட்டத்தை 'காமராஜர் காலை உணவுத் திட்டம்' என த.வெ.க. அரசு நேற்றைய தினம் மாற்றம் செய்து உத்தரவிட்டது. தி.மு.க. ஆட்சியில் அப்போதைய முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களால் தொடங்கப்பட்டது முதல்வரின் காலை உணவுத் திட்டம்! இதை த.வெ.க. அரசு மாற்றி 'காமராஜர் காலை உணவுத் திட்டம்' என பெயரிட்டது.

நேற்றைய முன்தினம் 'காமராஜர் உணவு திட்டம்' என பெயரிட்ட நிலையில் இன்றோ காமராஜர் படத்தை தூக்கி எறிந்துவிட்டு 'ஜனநாயகன்' பேனர் வைக்கப்பட்டது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. த.வெ.க.வின் கொள்கை தலைவர்களில் காமராஜரும் ஒருவர் என்கிற போது அந்த போர்டை தூக்கி எறிந்துவிட்டு 'ஜனநாயகன்' பட பேனரை வைத்தது குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சரோ அல்லது முதல்வரோ இதுவரை வாய் திறக்கவில்லை.

## கடலூர் மேற்கு மாவட்டச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் சி.வி.கணேசன் தலைமையில்

# மொழிப்போர்த் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி குடும்பத்திற்கு ரூ.1 லட்சம் கல்வி நிதி உதவி!

### மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் முன்னிலையில் வழங்கல்!

கடலூர் ஜூலை 24-

கழக தலைவர் மு.க. ஸ்டாலின் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் வழிகாட்டுதல் படி இளைஞர் அணி அறக்கட்டளை சார்பில் கல்வி, மருத்துவம் மற்றும் கழக முன்னோடிகளுக்குப் பொற்கிழி என பல்வேறு நிதி உதவிகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகிறது.

அவ்வகையில் நிதி உதவிகளைப் பெறும் பயனாளிகளுக்கான காசோலைகளை இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் தமிழ் மொழிக்காக தன் இன்னுயிரை தீயிட்டு மாய்த்துக்கொண்ட தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி அவர்களுடைய மகள் திராவிட செல்வி அவர்களுடைய பேத்தி சாந்தினி அவர்களுக்கு கல்வி உதவியாக ரூபாய் 1 லட்சம் காசோலையை அவர்களது இல்லம் சென்று கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர்- முன்னாள் அமைச்சர்-திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி. வெ.கணேசன் தலைமையில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். எஸ்.கணேஷ்குமார் முன்னிலையில், அவரது குடும்பத்தாரிடம் வழங்கினர்.

இதில் நகர கழகச் செயலாளர் தண்டபாணி, மாவட்ட ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் எஸ்.ராமு, ஒன்றிய செயலாளர்கள் வேல்முருகன், கனக.கோவிந்தசாமி, சுரேஷ், நகர மன்ற தலைவர் சங்கவிமுருகதாஸ், நகரத் துணைச் செயலாளர் நம்பிராஜன், பொதுக்குழு உறுப்பினர் அரங்க.பாலகிருஷ்ணன், மாவட்ட பிரதிநிதி ஆட்டோ.பாண்டியன், செங்குட்டுவன், சுந்தரமூர்த்தி, மாவட்ட நிர்வாகிகள் ராஜேஷ், அருள்குமார், இளங்கோவன், முகமதுபாசில், ரவிச்சந்திரன், அறிவுடைநம்பி, மணிவேல் நகர இளைஞரணி அமைப்பாளர் பொன். கணேஷ், வசந்த் துணை அமைப்பாளர்கள் தளபதிகுமார், நிஷாந்த், கார்த்தி நகர மன்ற உறுப்பினர்கள் அன்பு, முருகன், சரவணன், முத்துக்குமார், பாலு மற்றும் வார்டு நிர்வாகிகள், வார்டு இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு FDI, முதலீட்டு ஒப்பந்தங்கள் மதிப்பு எவ்வளவு?

### மக்களவையில் தமிழச்சி தங்கபாண்டியன் கேள்வி!



புதுடெல்லி, ஜூலை.24–

தென் சென்னை மக்களவைத் தொகுதி உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் மக்களவையில் வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகத்திடம் தமிழ்நாட்டில் நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் (Global Investors Meet) கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் (MoU), அந்நிய நேரடி முதலீடு (FDI), செயல்படுத்தப்படாத ஒப்பந்தங்கள் மற்றும் மாநில வாரியான FDI பங்கு குறித்து கேள்வி எழுப்பினர்.

அதன் விபரம் வருமாறு:–

கடந்த 2020–21ஆம் நிதியாண்டு முதல் தமிழ்நாட்டின் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் மதிப்பு எவ்வளவு? அவற்றுடன் ஒப்பிடும்போது மாநிலத்தில் உண்மையில் கிடைத்த அந்நிய நேரடி முதலீடு எவ்வளவு?

செயல்படுத்தப்படாமல் உள்ள புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் எத்தனை? அவை எந்தத் துறைகளைச் சேர்ந்தவை? முதலீட்டாளர்கள் தெரிவித்த காரணங்கள் என்ன?

மாநில அளவிலான காரணங்களைத் தவிர, மத்திய அரசின் முதலீட்டு ஊக்குவிப்பு அமைப்புகள் ஏதேனும் மத்திய அரசின் கொள்கை அல்லது நிர்வாகத் தடைகளை கண்டறிந்துள்ளனவா?

2020–21ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் முதலீடு செய்த வெளிநாட்டு நிறுவனங்களின் பட்டியல் மற்றும் ஆண்டுவாரியான FDI விவரங்கள் என்ன?

இந்தியாவுக்கு வந்த மொத்த FDI–யில் தமிழ்நாட்டின் பங்கு எவ்வளவு? அது குஜராத், கர்நாடகா உள்ளிட்ட பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் எவ்வாறு உள்ளது?

கடந்த ஐந்து ஆண்டுகளில் மாநில வாரியாகவும், தொழில் துறை வாரியாகவும் கிடைத்த FDI விவரங்கள் என்ன? என்று கேள்வி எழுப்பினார்.

இதற்கு மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணை அமைச்சர் ஜிதின் பிரசாதா எழுத்துப்பூர்வமாக பதில் அளித்தார். அந்த பதிலில் கூறப்பட்டுள்ளதாவது:–

தொழில்துறை வளர்ச்சிக்கான உகந்த சூழலை உருவாக்க மத்திய அரசு 'மேக் இன் இந்தியா', 'ஸ்டார்ட் அப் இந்தியா', 'பிரதமர் கதி சக்தி', தேசிய தொழில் வழித்தடத் திட்டம், உற்பத்தியுடன் இணைக்கப்பட்ட ஊக்கத்தொகை (PLI) திட்டம், தொழில் செய்வதற்கான எளிமை (Ease of Doing Business), தேசிய ஒற்றைச் சாளர அமைப்பு (NSWS), இந்திய தொழில் நில வங்கி, திட்டக் கண்காணிப்பு குழு (PMG), FDI கொள்கை தளர்வு உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

2020 முதல் 2026 வரை தமிழ்நாட்டில் மொத்தம் 1,322 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகியுள்ளன. அவற்றின் மொத்த முதலீட்டு மதிப்பு ரூ.13,60,014 கோடி ஆகும். இதில், 2024ஆம் ஆண்டு நடைபெற்ற உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் மட்டும் 663 ஒப்பந்தங்கள் கையெழுத்தாகி, ரூ.7,12,171 கோடி முதலீடு உறுதி செய்யப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் பதிவான அந்நிய நேரடி முதலீடு (FDI) 2020–21ஆம் ஆண்டில் 2,323 மில்லியன் அமெரிக்க டாலராக இருந்த நிலையில், 2025–26ஆம் ஆண்டில் 4,724 மில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளது.

2020 முதல் 2025 வரை மொத்தம் 57 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல்வேறு காரணங்களால் செயல்படுத்தும் நிலைக்கு வரவில்லை. அவை ஆட்டோமொபைல், இரசாயனங்கள், மின்னணுவியல், தகவல் தொழில்நுட்பம், காலணி, உள்கட்டமைப்பு மற்றும் போக்குவரத்து, ஜவுளி, உயிரியல் அறிவியல் உள்ளிட்ட பல்வேறு துறைகளைச் சேர்ந்தவை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுக்கு வந்த மொத்த FDI–யில் தமிழ்நாட்டின் பங்கு 2020–21ஆம் ஆண்டில் 3.90 சதவீதமாக இருந்த நிலையில், 2025–26ஆம் ஆண்டில் 8.03 சதவீதமாக உயர்ந்துள்ளது. அதே காலகட்டத்தில் குஜராத்தின் பங்கு 9.71 சதவீதமாகவும், கர்நாடகாவின் பங்கு 21.99 சதவீதமாகவும் இருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாநில வாரியாகவும், தொழில் துறை வாரியாகவும் FDI விவரங்கள் இணைப்பாக வழங்கப்பட்டுள்ளன. கணினி மென்பொருள் மற்றும் வன்பொருள், சேவைத் துறை, வர்த்தகம், கட்டுமானம், புதுப்பிக்கத்தக்க எரிசக்தி, உணவு பதப்படுத்துதல், வாகன உற்பத்தி உள்ளிட்ட துறைகள் அதிகளவில் அந்நிய முதலீட்டை ஈர்த்துள்ளதாக பதிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# நாடாளுமன்ற இரு அவைகளும் 4வது நாளாக முடங்கியது!

புதுடெல்லி, ஜூலை. 24-

நீட், மேகதாது விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளால் நாடாளுமன்ற இரு அவைகளும் 4வது நாளாக நேற்றும் முடங்கின.

மக்களவை நேற்று காலை கூடியதும், நீட் மற்றும் மேகதாது பிரச்சனை குறித்து அளிக்கப்பட்ட நோட்டீஸ் மீது அவையை ஒத்திவைத்து, விவாதம் நடத்த வலியுறுத்தி திமுக உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் அவையின் மையப்பகுதிக்கு சென்று முழக்கங்களை எழுப்பினர். இதனால் ஏற்பட்ட அமளி காரணமாக மக்களவை தொடங்கிய ஒரு நிமிடத்துக்குள்ளாகவே நண்பகல் 12மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் அவை மீண்டும் கூடியபோதும், இதே கோரிக்கைகளை வலியுறுத்தி உறுப்பினர்கள் முழக்கம் எழுப்பியதால் பிற்பகல் 2 மணிவரை மக்களவை ஒத்திவைக்கப்பட்டது.

இதேபோல், மாநிலங்களவையிலும் நீட், மேகதாது பிரச்சனை மற்றும் மாணவர்கள் மீதான தாக்குதல் விவகாரங்கள் எதிரொலித்தன. இவ்விவகாரங்கள் குறித்த விவாதம் நடத்த வேண்டும் என எதிர்க்கட்சி எம்.பி.க்கள் வலியுறுத்தினர். இதனை ஏற்க அவைத் தலைவர் மறுத்ததைக் கண்டித்து அவையில் முழக்கம் எழுப்பப்பட்டது. இதனைத் தொடர்ந்து மாநிலங்களவையும் 12 மணி வரையிலும், பின்னர் மீண்டும் கூடியபோதும் அமளி நீடித்ததால் பிற்பகல் 2 மணி வரையிலும் ஒத்திவைக்கப்பட்டது.



தி.மு.கழக "இளைஞரணி அறக்கட்டளை சார்பில் கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் சி.வி. கணேசன் தலைமையில், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம்.எஸ். கணேஷ்குமார் முன்னிலையில் மொழிப்போர் தியாகி கீழப்பழுவூர் சின்னசாமி குடும்பத்திற்கு கல்வி நிதி உதவி ரூபாய் 1. லட்சம் வழங்கப்பட்டது.உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.